ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

# பிள்ளையந்தாதி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பிள்ளையந்தாதி

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந் தமிழால் ⋆
நேராக வேதாந்த தேசிகர் தாள் இணைக்கீழ் மொழிந்தான் ⋆
ஏரார் மறைப் பொருள் எல்லாம் எடுத்திவ்வுலகுய்யவே ⋆
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே

sunder kidāmbi
prapatti dot com

‡ மா மலர் மன்னிய மங்கை ⋆
மகிழ்ந்துறை மார்பினன் தாள் ⋆
தூ மலர் சூடிய தொல் அருள் ⋆⋆
மாறன் துணை அடிக்கீழ் வாழ்வை உகக்கும் ⋆
இராமானுசமுனி வண்மை போற்றும் சீர்மையன் ⋆
எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே ‖ **1** ‖

சென்னி வணங்கச் ⋆
சிறு பனி சோர என் கண் இணைகள் ⋆
வெந் நரகங்களும் வீய வியன் கதி இன்ப மேவ ⋆⋆
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூ மலர்த் தாள் மன்னிய ⋆
நாள்களும் ஆகுங்கொல் ⋆
மாநிலத்தீர் நமக்கே ‖ **2** ‖

மாநிலத்தோதிய ⋆
மாமறை மன்னிய நற்கலைகள் ⋆
ஆனவை செய்யும் அரும் பொருள் அத்தனையே அருளும் ⋆⋆
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரம் செய் ⋆
ஊனம் இல் தூப்புல் அய்யன் ⋆
ஓர் புகழ் அன்றி உய்வில்லையே ॥ **3** ॥

உய்யும் வகை இல்லை ⋆
உத்தரவேதியுள் வந்துதித்த ⋆
செய்யவள் மேவிய சீர் அருளாளரைச் ⋆⋆
சிந்தை செய்யும் மெய்யவன் எந்தை ⋆
இராமானுசன் அருள் மேவி வாழும் ஐயன் ⋆
இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருள் அன்றியே ॥ **4** ॥

sunder kidambi
prapatti dot com

அன்றிவ்வுலகினை ஆக்கி ⋆
அரும் பொருள் நூல் விரித்து ⋆
நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி ⋆⋆
பின்னும் வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய் ⋆
நின்று நிகழ்ந்து ⋆
மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே ॥ **5** ॥

வித்தகன் வேதியன் ⋆
வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல் ⋆
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள் ⋆⋆
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலம் அறக் ⋆
கைத்தவன் என்றுரைத்தேன் ⋆
கண்டிலேன் என் கடு வினையே ॥ **6** ॥

வினைகாள் உமக்கு ⋆
இனி வேறோரிடம் தேடவேண்டும் ⋆
எனைச் சின மேவி முன் போல் சிதைக்கும் வகை இங்கரிது கண்டீர் ⋆⋆
என் எனில் இராமானுசமுனி இன்னுரை சேரும் ⋆
தூப்புல் புனிதன் ⋆
என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே ॥ 7 ॥

பொருந்திப் புவி தனில் ⋆
பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள் ⋆
இருந்து நரகின் இடர் கெடும் ஆற்றை அறிகின்றிலீர் ⋆⋆
பொருந்தும் பொருள் ஒன்று கேளீர் ⋆
பொங்கும் இவ்விடர்க் கடற்கு வருந்தாது ⋆
தூப்புல் மா பூருடன் பாதம் வணங்குமினே ॥ 8 ॥

sunder kidambi prapatti dot com

வணக்கம் ஒடுக்கம் ⋆
வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும் ⋆
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் இகந்து நிற்கும் ⋆⋆
குணக்குலம் ஓங்கும் இராமானுசன் குணம் கூறும் ⋆
தூப்புல் அணுக்கனைப் பிள்ளை தனை ⋆
அரணாக அடைபவர்க்கே ॥ 9 ॥

அடைபவர் தீவினை மாற்றி ⋆
அருள் தரும் தூப்புல் ஐயா ⋆
இடர் தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமிழ்ந்த என்னை ⋆⋆
கடையறப் பாசம் கழற்றி நின் தாள் இணை காணும் வண்ணம் ⋆
உடையவனே ! அருளாய் ⋆
உணர்ந்தார் தங்கள் கற்பகமே ॥ 10 ॥

கற்பகமே என்று ⋆
காசினியோரைக் கதிக்க மாட்டேன் ⋆
வெற்பிடையே நின்று வெந் தவத் தீயிலும் வேவ மாட்டேன் ⋆⋆
பற்பல கலைவல்ல பாவலனே பத்தர் ஏத்தும் தூப்புல் ⋆
அற்புதனே அருளாய் ⋆
அடியேனுக்கரும் பொருளே ‖ **11** ‖

பொருளானதொன்றும் ⋆
என்னில் பொருந்தாததும் அன்றி அந்தோ ⋆
மருளே மிகுத்து மறையவர் நல் வழி மாற்றி நின்றேன் ⋆⋆
தெருளார் மறைமுடித் தேசிகனே ⋆
எங்கள் தூப்புல் தேவே ! அருளாய் ⋆
இனி எனக்குன் அருளே அன்றி ஆறில்லையே ‖ **12** ‖

sunder kidambi prapatti dot com

ஆறாக எண்ணும் ⋆
அரும் கருமம் ஞானம் காதல் கொண்டு ⋆
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரத்தி இல்லை ⋆⋆
தேறாது திண் மதி சீர் ஆர் கதியிலும் செம் பொன் மேனி ⋆
மாறாத தூப்புல் மாலே ! ⋆
மறவேன் இனி நின் பதமே ‖ **13** ‖

நின் பதம் தன்னிலும் ⋆
நேரே எனக்கில்லை அன்பு கண்டாய் ⋆
நின் பதம் ஒன்றியவன் பரிலும் நேசம் இல்லை அந்தோ ⋆⋆
என் படி கண்டினி என் பயன் ஏதம் இல் தூப்புல் எந்தாய் ! ⋆
உன் படியே அருளாய் ⋆
உதவாய் எனக்குன் அருளே ‖ **14** ‖

உன் அருள் அன்றி ⋆
எனக்கொரு நற்றுணை இன்மையினால் ⋆
என் இரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி ⋆⋆
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே ⋆
பொன் அருளால் அருளாய் ⋆
புகழ் தூப்புல் குலவிளக்கே ‖ **15** ‖

விளக்காகி ⋆
வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள் ⋆
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார் ⋆⋆
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக் ⋆
களக்காதல் செய்யும் நிலை கடியாய் ⋆
தூப்புல் காவலனே ‖ **16** ‖

sunder kidāmbi
prapatti dot com

‡ காவலர் எங்கள் ⋆
கிடாம்பிக் குல பதி அப்புளார் தம் ⋆
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து ⋆⋆
அவர் தம் அருளால் நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற ⋆
நம்பி காவல தூப்புல் குலத்தரசே ! ⋆
எம்மைக் காத்தருளே ‖ **17** ‖

அருள் தரும் ஆரண தேசிகனே ! ⋆
எங்கள் தூப்புல் தேவே ⋆
வரு கவி தார்க்கிக சிங்கமே ! ⋆
வாதியர் வாழ்வறுத்தாய் ⋆⋆
இரு கையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய் ⋆
உருவ எனக்கருளாய் ⋆
எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே ‖ **18** ‖

‡ தொண்டர் உகக்கும் துணை அடி வாழி ! ⋆
நின் தூ முறுவல் கொண்ட முகம் வாழி ! ⋆
வாழி வியாக்கியா முத்திரைக் கை ⋆⋆
வண் திருநாமமும் வாழி ⋆
மணி வட முப்புரி நூல் கொண்ட சீர்த் தூப்புல் குல மணியே ! ⋆
வாழி நின் வடிவே ‖ **19** ‖

‡ வடிவழகார்ந்த ⋆
வண் தூப்புல் வள்ளல் மென் மலர் அடிமேல் ⋆
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் ⋆⋆
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்தோதும் அன்பர் ⋆
முடியிடை நேர் படும் ⋆
தூப்புல் அம்மான் பத மா மலரே ‖ **20** ‖

பிள்ளையந்தாதி முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti dot com